செ. கு. எண்:023 நாள் :15.01.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 15.1.2014

14.12.2013 அன்று ராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், காராங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. செபஸ்தியன் என்பவரின் மகன் ஆரோக்கியதாஸ்;

23.12.2013 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிள்ளை மீனவர் பகுதியைச் சேர்ந்த திரு. ராமர் என்பவரின் மகன் செல்வதுரை;

2.1.2014 கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிலம்பிமங்கலம் மஜ்ரா, சாமியார்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் நடராஜன்;

–– ஆகியோர் கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த மீனவர்கள் ஆரோக்கியதாஸ், செல்வதுரை மற்றும் நடராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9